International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலப் பொருளாதாரம்: இலக்கிய மற்றும் வரலாற்றியல் நோக்கு

ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ்
முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவெண்:2511309011001

முனைவர் ஜா. ஞா. ஜோணி ஜெபமலர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், தமிழாய்வு மையம்
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு – 629174

ஆய்வுச் சுருக்கம்

சங்ககாலத் தமிழர்களின் திணைக்கோட்பாட்டில், கடலும் கடல் சார்ந்த பகுதியும் 'நெய்தல் நிலம்' என வகுக்கப்பட்டது. நெய்தல் நிலப் பொருளாதாரம் கடல் வளங்களைச் சார்ந்தே அமைந்திருந்தது. மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்துக்குளித்தல் மற்றும் சங்கு குளித்தல் ஆகியன அந்நில மக்களின் முக்கியத் தொழில்களாக விளங்கின.

உமணர்கள் 'பண்டமாற்று' முறை மூலம் உப்பைக் கொடுத்து, அதற்குப் பதிலாக நெல் மற்றும் பிற தானியங்களைப் பெற்ற செய்தி, அக்கால உள்ளூர் வணிகத்தின் செழிப்பைப் புலப்படுத்துகிறது. வரலாற்று நோக்கில், நெய்தல் நிலப் பகுதிகள் சங்ககாலத் தமிழர்களின் பன்னாட்டு கடல்வழி வணிகத்திற்கு முக்கிய மையங்களாகத் திகழ்ந்துள்ளன.

இவ்வாய்வு, சங்கப் பாடல்கள் வெறும் தலைவன்-தலைவி அக உணர்வுகளை மட்டுமின்றி, சங்ககாலச் சமூகத்தின் உற்பத்தி முறை, பண்டமாற்று முறை, கடல்சார் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய வணிகத் தொடர்புகள் ஆகிய வரலாற்றுச் சான்றுகளையும் உள்ளடக்கியுள்ளன என்பதை நிறுவுகிறது.

முதன்மைச் சொற்கள் : நெய்தல் திணை, பண்டமாற்று முறை, உமணர்கள்

அறிமுகம்

தொல்காப்பியர் நெய்தல் நிலத்தை "வருணன் மேய பெருமணல் உலகம்"[1] என வரையறுக்கிறார். இவ்வரையறை நெய்தல் நிலத்தின் புவியியல் அமைப்பை மட்டுமன்றி, கடற்கரையை மையமாகக் கொண்ட வாழ்வியல் மற்றும் பொருளாதார அமைப்பையும் சுட்டுகிறது. சங்ககாலத் தமிழரின் ஐந்திணை வாழ்க்கை முறையில், நெய்தல் நிலம் இயற்கை வளங்களும் தொழில் வளங்களும் ஒருங்கிணைந்த பொருளாதார மண்டலமாக விளங்கியது.

நெய்தல் நில மக்களான பரதவர், நுளையர், திமிலர் ஆகியோர் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், சங்கு சேகரித்தல், உப்பு உற்பத்தி போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். இத்தொழில்கள் அவர்களின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், பரந்த வணிகச் செயல்பாடுகளுக்கும் அடித்தளமாக அமைந்தன.

இந்தியப் பெருங்கடலின் மையத்தில் அமைந்திருந்ததால், தமிழகம் ரோம், எகிப்து,

அரேபியா, இலங்கை மற்றும் தென்கிழக் காசிய நாடுகளுடன் கடல்வழி வாணிகம் செய்யும் வாய்ப்பைப் பெற்றது. இதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைத்தது. துறைமுக நகரங்கள் வளர்ச்சி பெற்றன. பல தொழில்கள் உருவாகின. மேலும், பல்வேறு நாடுகளின் மக்களிடையே பண்பாட்டுப் பரிமாற்றமும் ஏற்பட்டது. இதனை கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி தனது தென்னிந்திய வரலாறு நூலில் குறிப்பிடுகிறார்.[2]

மீன்பிடித்தலும் நெய்தல் நிலப் பொருளாதாரமும்

நெய்தல் நில மக்களின் முதன்மை வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடித்தல் விளங்கியது. கடற்கரையை ஒட்டிய குடியிருப்பு களில் வாழ்ந்த பரதவர்கள், அலைகளின் இயல்பையும் பருவக்காற்றின் தன்மையையும் நன்கு அறிந்து ஆழ்கடலுக்குச் சென்று பல்வேறு வகையான மீன்களைப் பிடித்தனர். இதனைச் சங்க இலக்கியப் பாடல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்... - (நற்றிணை 219)

கொழுமீன் கொள்பவர் பாக்கம்... - (நற்றிணை 207)

மேற்கண்ட பாடல்கள், பரதவர்களின் முதன்மைத் தொழிலாக மீன்பிடித்தல் விளங்கியதையும், அவர்கள் பெருமளவில் மீன்களைப் பிடித்ததையும் உணர்த்துகின்றன. மீன்பிடித்தலோடு மட்டுமல்லாமல், அதிக அளவில் கிடைத்த மீன்களை நீண்டகாலம் பயன்படுத்தவும், வணிகத்திற்காகவும் பதப் படுத்தும் முறையும் நெய்தல் நில மக்களிடையே சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தது. இதனை நற்றிணை பாடல் எடுத்துரைக்கின்றது.

உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர் மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்... - (நற்றிணை 63)

இப்பாடலில், பரதவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று பெரிய வலைகளால் மீன்பிடிப்பதும், பிடிக்கப்பட்ட அதிகப்படியான மீன்களை கடற் கரையின் மணற்பரப்பில் உலர்த்தி பதப் படுத்துவதும் சுட்டிக்காட்டப்படுகிறது. பதப் படுத்தப்பட்ட கருவாடானது பிற திணைப் பகுதிகளுக்கு மட்டுமன்றி, தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது[3]. இதன்மூலம் மீன் உணக்கல் என்பது உணவுப் பாதுகாப்பிற்காக மட்டுமன்றி, வணிக நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கியமான தொழிலாக இருந்தது என்பதை அறிய முடிகிறது.

மீன்கள் உள்நாட்டுப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பண்டமாற்று வணிகத்தில் முக்கியப் பங்காற்றியதை சங்க இலக்கியம் பதிவு செய்கிறது.

வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள் வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள் யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர! - (ஐங்குறுநூறு, புலவிப்பத்து 48)

இப்பாடலின் பொருளின்படி, வலையால் மீன் பிடிக்கும் பாணனின் மகள் கொண்டு வந்த வரால் மீனுக்குப் பதிலாக, ஒரு இல்லத்தரசி வெண்ணெல்லை கூடையில் நிரப்பிக் கொடுக்கிறாள். இது மீனுக்குப் பதிலாக நெல் வழங்கப்பட்ட பண்டமாற்று வணிகத்தை நேரடியாக எடுத்துக்காட்டுகிறது. எனவே, சங்ககால நெய்தல் நிலப் பொருளாதாரத்தில் மீன்பிடித்தல் என்பது வெறும் வாழ்வாதாரத் தொழிலாக மட்டுமல்லாமல், மீன் பதப் படுத்துதல், பண்டமாற்று வணிகம் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிக வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கிய முக்கிய பொருளாதார நடவடிக்கையாக இருந்தது என்பது இச்சான்றுகளின் வழி தெளிவாகிறது.

உப்பும் அதன் உள்நாட்டு வாணிகப் பங்களிப்பும்

தமிழர் வாழ்வியலில் உப்பின் இன்றியமை யாமையை "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்ற நாட்டுப்புறப் பழமொழி வெளிப்படுத்துகிறது. உணவின் சுவைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருளாக மட்டுமன்றி, சங்ககாலத்தில் உப்பு ஒரு முக்கியமான வாணிகப் பொருளாகவும் விளங்கியது. நெய்தல் நில மக்களின் முதன்மையான தொழில்களுள் ஒன்றாக உப்பு உற்பத்தியும் உப்பு வாணிகமும் இடம்பெற்றன.

உப்பை மாறி வெண்ணெல் தரீஇய உப்பு விளை கழனிச் சென்றனள், அதனால். - (குறுந்தொகை - 269)

என்ற பாடல் வரிகள் கடற்கரைப் பகுதிகளில் அமைந்திருந்த உப்பளங்களையும், அங்கு நடைபெற்ற உப்பு உற்பத்தித் தொழிலையும்

சுட்டுகின்றன. உப்பளங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு, உமணர்களால் மாட்டு வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு உள்நாட்டு பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அது நெல் போன்ற வேளாண் விளைபொருட்களுடன் பண்டமாற்று முறையில் விற்பனை செய்யப்பட்டது. இதனை அகநானூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து,
பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி...
(நற்றிணை -183)

இப்பாடல், வெண்மையான உப்பை வண்டி களில் ஏற்றிச் சென்று விற்பனை செய்த உப்பு வணிகர்களின் செயல்பாட்டை எடுத்துரைக்கிறது. உப்பு முதலிய சில பொருள்களை வண்டிகளில் கொணர்ந்து உமணர் விற்றனர். வண்டிகளில் பொருள் களை ஏற்றி ஊர் ஊராகச் சென்று விற்கும் குழுவின் செலவை 'ஒழுகை' (சிறுபாண்.65) என்றும் அக்குழுவை 'சாத்து' (பெரும்பாண். 80) என்றும் வழங்குவர்[4]. எனவே, சங்க காலத்தில் உப்பு உற்பத்தி என்பது நெய்தல் நில மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த ஒரு முக்கியத் தொழிலாக விளங்கியதை அறியலாம்.

முத்து வளமும் நெய்தல் நிலப் பொருளாதாரமும்

சங்க இலக்கியங்களில் நெய்தல் நில மக்களின் பொருளாதார வாழ்வில் முத்துக் குளித்தல் மற்றும் முத்து வணிகம் முக்கிய இடம் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக, பாண்டிய நாட்டின் புகழ்பெற்ற துறைமுக நகரமான கொற்கை, உயர்தர முத்துகள் கிடைக்கும் முக்கிய மையமாக விளங்கியது. தாமிரபரணி ஆறு கொற்கைக் பகுதியில் கடலில் கலந்ததால் கொற்கையில் கிடைத்த முத்துக்களை கவுடில்யரின் அர்த்த சாஸ்திரம் "தாம்ரபர்ணிகம்" என்று குறிப்பிடுகிறது[5]. கொற்கையில் கிடைத்த முத்துக்கள் உள்நாட்டு அரசவைகளிலும், வெளிநாட்டு வணிகர்களிடமும் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தன.

முத்துப்படு பரப்பின் கொற்கை முன்றுறை
(நற்றிணை 23)

என்ற பாடல் வரி, கொற்கைக் கடற்பரப்பில் முத்துக்கள் மிகுதியாகக் கிடைத்ததையும், அப்பகுதி முத்து வளத்தால் சிறப்புற்றிருந் ததையும் எடுத்துரைக்கிறது.

முத்துக்குளித்தலில் ஈடுபட்ட பரதவர்கள் ஆழ்கடலில் மூழ்கி முத்துச் சிப்பிகளைச் சேகரித்தனர். சேகரிக்கப்பட்ட சிப்பிகளில் இருந்து பெறப்பட்ட முத்துக்கள் அளவு, வடிவம், ஒளிர்வு போன்ற தரங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு வணிகர் களிடம் விற்பனை செய்யப்பட்டன. இம்முத்து வணிகம் தமிழகத்தின் உள்நாட்டு வாணிக வளர்ச்சிக்கும், ரோமப் பேரரசு உள்ளிட்ட வெளிநாடுகளுடனான கடல்சார் வணிகத் தொடர்புகளுக்கும் முக்கிய காரணமாக அமைந்தது.

சங்கு: நெய்தல் நிலப் பொருளாதாரத்தின் கடல் வளம்

நெய்தல் நிலப் பொருளாதாரத்தில் முத்திற்கு அடுத்தபடியாகச் சிறப்பிடம் பெற்ற கடல்வளம் சங்கு ஆகும். சங்குகள் அணிகலன்கள் தயாரித்தல், சமயச்சடங்குகள், இசைக்கருவி, வணிகப் பொருள் ஆகிய பல்வேறு பயன் பாடுகளைக் கொண்டிருந்தன. அகநானூறு பரதவர்களின் சங்கு சேகரிப்புத் தொழிலைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
(அகநானூறு-350)

இவ்வடிகள், சுறாமீன்கள் நிறைந்த ஆழ் கடலில் உயிரைப் பணயம் வைத்து மூழ்கி, அரிய வலம்புரிச் சங்குகளைப் பரதவர்கள் சேகரித்ததைத் தெளிவாக எடுத்துரைக்கின் றன. சேகரிக்கப்பட்ட சங்குகள் பின்னர் அறுக்கப்பட்டு வளையல்கள், ஆபரணங்கள் மற்றும் அலங்காரப் பொருட்களாக மாற்றப் பட்டன. சங்ககாலத்தில் 'சங்கு' என்ற பெயர் வழக்கில் இல்லை. 'வளை', 'வலம்புரி' போன்ற பெயர்களே பயன்பாட்டில் இருந்தன. வளையை (சங்கு) அறுத்துச் செய்யப்பட்ட அணிகலன் என்பதால், அது 'வளை' என்றும் 'வளையல்' என்றும் அழைக்கப் பட்டது.[6]

தொல்லியல் அகழாய்வுகளில் கொற்கை, அழகன்குளம், அரிக்கமேடு போன்ற இடங் களில் கண்டெடுக்கப்பட்ட சங்கு வேலைப் பாட்டுக் கழிவுகள், முழுமையடையாத சங்கு வளையல்கள் சங்கு அறுக்கும் தொழிற்கூடச் சான்றுகள், இத்தொழிலின் பரவலை உறுதிப் படுத்துகின்றன[7]. எனவே, சங்கு என்பது

நெய்தல் நிலத்தின் ஒரு இயற்கை வளமாக மட்டுமல்லாமல், தொழில், கைவினை, வணிகம் ஆகிய மூன்றையும் இணைத்த பொருளாதார வளமாகவும் விளங்கியதை அறியலாம்.

நெய்தல் நிலப் பட்டினங்கள்- வணிக மையங்கள்

சங்ககால நெய்தல் நிலப் பட்டினங்கள் கடற்கரையை ஒட்டிய வணிக மையங்களாக விளங்கின. "பட்டணங்களிலும் பட்டினங்களி லும் தான் அக்காலத்து தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலைகள் எல்லாம் வளர்ந்தன"[5]. இப்பட்டினங்களில் உள்நாட்டு-வெளிநாட்டு வணிக நடவடிக்கைகள் சிறப்பாக நடை பெற்றன. இதற்குச் சான்றாக, பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தில் பல்வேறு நாடுகளிலி ருந்து புலம்பெயர்ந்து வந்த மக்கள் பல மொழிகளுடன் ஒன்றுகூடி இனிது வாழ்ந்த செய்தியை,

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்
(பட்டினப்பாலை, 216-218)

எனப் பதிவு செய்கிறது. நச்சினார்க்கினியர் உரையில் "புலம்பெயர் மாக்கள்" என்பதற்கு "சோனகர், சீனர் முதலியோர்" என விளக்கம் தரப்படுகிறது.[8.] இதன் மூலம் பட்டினங்கள் பன்னாட்டு வணிகத் தொடர்பு கொண்ட நகரங்களாக இருந்ததை அறியலாம். வணிகமும் தொழிலும் வளர்ந்த இத்தகைய நகரங்கள் மக்களின் வாழ்வாதாரத்திற்கான முக்கிய மையங்களாக விளங்கின. இதனை அடிப்படையாகக் கொண்டே, "கெட்டும் பட்டணம் சேர்"[9] என்ற பழமொழி உருவாகி யிருக்கக் கூடும்.

துறைமுகங்களும் கடல்வழி வாணிக பொருளாதாரமும்

சங்ககாலத் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முசிறி, காவிரிப்பூம்பட்டினம் (புகார்), கொற்கை, தொண்டி போன்ற துறைமுகங்கள் அடித்தளமாக விளங்கின. இத்துறைமுகங்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வாணிக மற்றும் பொருளாதார மையங்களாகச் செயல்பட்டன. அகநானூறு முசிறித் துறைமுகத்தின் செழிப்பைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறது

யவனர்தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி. (அகநானூறு-149)

இந்தப் பாடலில் "கறி" என்பது **மிளகைக்** குறிக்கிறது. யவனர்கள் பொன்னைக் கொண்டு வந்து மிளகை வாங்கிச் சென்றனர் என்பதன் மூலம் மிளகின் அக்கால சந்தை மதிப்பையும், மிளகினால் முசிறி ஒரு பன்னாட்டு வணிக மையமாக விளங்கியதையும் அறியலாம்.

நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,
காலின் வந்த கருங்கறி மூடையும்
(பட்டினப்பாலை 184-193)

கடல் வழியாக குதிரைகள் மற்றும் வெளி நாட்டுப் பொருட்கள் புகார் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டதை பட்டினப்பாலை விளக்குகிறது.

சுங்கவரி மற்றும் துறைமுக நிர்வாகம்

சங்ககாலத் துறைமுக நகரங்களின் வருவாயில் 'உல்கு' எனப்படும் சுங்கவரி முக்கியப் பங்கு வகித்தது. காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகப் பொருட்களுக்குச் சுங்கவரி (உல்கு) வசூலிக்கப்பட்டதையும், பின்னர் அவை அரசின் கட்டுப்பாட்டில் வெளியே அனுப்பப்பட்டதையும் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது

"வைகல்தொறும் அசைவின்றி
உல்குசெயக் குறைபடாது ...
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி"
(பட்டினப்பாலை, 124-135)

இவ்வடிகள், வணிகப் பொருட்களிடமிருந்து சுங்கவரி வசூலிக்கப்பட்டதையும், சோழ அரசின் புலிப் பொறி பதிக்கப்பட்ட பின்னர் அவை வெளியே அனுப்பப்பட்டதையும் உணர்த்துகின்றன. இதன் மூலம் காவிரிப் பூம்பட்டினத்தில் சுங்கவரி வசூல், பொருட் களின் பாதுகாப்பு, அரசின் கண்காணிப்பு மற்றும் பொருட்களை முத்திரையிட்டு வெளியேற்றுதல் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட வணிக நிர்வாக நடைமுறைகள் நிலவியதை அறியலாம்.

வெளிநாட்டு வரலாற்று ஆதாரங்களின் ஒப்பாய்வு

சங்க இலக்கியங்களில் காணப்படும் கடல்வழி வாணிகச் செய்திகள் வெளிநாட்டு வரலாற்று நூல்களாலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த 'எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ்' என்ற கிரேக்க நூல் முசிறி துறைமுகத்திலிருந்து மிளகு, முத்து, அகில், யானைத்தந்தம் போன்ற பொருட்கள் ரோமப் பேரரசிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதை பதிவுசெய்கிறது.[10]

உரோமை பேரரசை சார்ந்த பிளினி, இந்தியாவுடனான வாணிகத்தால் ஆண்டு தோறும் பெருமளவு பொன் ரோமப் பேரரசிலி ருந்து வெளியேறுவதாகக் குறிப்பிடுகிறார்.[11] இது தமிழகம் உலகளாவிய வணிகத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை வெளிப் படுத்துகிறது.

இந்த வெளிநாட்டு ஆதாரங்கள் அகநானூற்றில் இடம்பெறும் யவன வாணிகச் செய்திகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, சங்க இலக்கியங்களின் வரலாற்று நம்பகத்தன்மை மேலும் உறுதிப்படுகிறது.

நிறைவுரை

சங்க இலக்கியங்களில் காணப்படும் பொருளாதாரச் சிந்தனைகள் இன்றைய நீலப் பொருளாதாரம், நிலையான கடல் வள மேலாண்மை, மற்றும் உலகளாவிய வணிகத் தொடர்புகள் போன்ற நவீன கருத்துகளுடன் ஒத்துப்போகின்றன. எனவே, சங்க இலக்கியங்கள் இலக்கியப் படைப்புகளாக மட்டுமன்றி, தமிழர்களின் பொருளாதார வரலாற்றை எடுத்துரைக்கும் முதன்மை ஆவணங்களாகவும் கருதப்பட வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல் – பாடல் 5, கழக வெளியீடு-1953
2. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்தியா வரலாறு, (முதல் பகுதி) தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்,1973,பக்கம் 219-224
3. மா. இராசமாணிக்கனார், தமிழக வரலாறு, சென்னை: பாரி நிலையம், 1959, பக்கம் 61
4. மு. சண்முகம் பிள்ளை , சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 2004 பக்கம் 64
5. மயிலை சீனி. வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,1974,பக்கம்129,11
6. தி, முத்துகண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், அதிபத்தர் பதிப்பகம்,1978, பக்கம் 134-135
7. Archaeological Excavations in Tamil Nadu - A Preliminary Report First Edition : 2025: Editors K. Rajan R. Sivanantham V.P. Yathees Kumar
8. நச்சினார்க்கினியர் உரை, பட்டினப்பாலை, அடி 217.
9. ச. சக்திவேல் (தொகுப்பு), தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்-2004, பக்கம் 249
10. Periplus Maris Erythraei, trans. Wilfred H. Schoff (New York: Longmans, Green and Co., 1912), Chapters 53–56.
11. Pliny the Elder, Natural History, Book VI, translated by H. Rackham (Cambridge, MA: Harvard University Press, 1942), VI.26.

துணைநூற்பட்டியல்:

1. தென்னிந்தியா வரலாறு, (முதல் பகுதி) தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்,1973,
2. அகநானூறு. சென்னை: தமிழ் வளர்ச்சித் துறை, 2022.
3. சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், அதிபத்தர் பதிப்பகம், சென்னை, 1978.
4. தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல் - கழக வெளியீடு-1953.
5. பழங்காலத் தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை- 1990.
6. நற்றிணை. சென்னை: தமிழ் வளர்ச்சித் துறை, 2022.
7. பட்டினப்பாலை. பத்துப்பாட்டு. சென்னை: தமிழ் வளர்ச்சித் துறை, 2022.
8. மதுரைக்காஞ்சி. பத்துப்பாட்டு. சென்னை: தமிழ் வளர்ச்சித் துறை, 2022.
9. சங்க இலக்கிய கட்டுரைகள்-கருத்தரங்கம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைகழகம்-1984.
10. தமிழர் நாகரிகமும் பண்பாடும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2008.
11. பண்டைத் தமிழர் வாழ்க்கையும் வழிபாடும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2009.
12. சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 2004
13. தமிழக வரலாறு: மக்களும் பண்பாடும், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002